**5011**

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

( உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம்,
படைப்பாற்றல், மொழித்திறன் )

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

*குறிப்பு* : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : $3 \times 4 = 12$

1. தமிழை உள்நாட்டு மொழிகளோடு ஒப்பவைத்து வகைப்படுத்துதல் ஆகாது என்று பரிதிமாற் கலைஞர் கூறுவது ஏன் ?

2. தமிழ் உயர்மொழி, தனிமொழி என்று உரைக்கப்படக் காரணங்கள் யாவை ?

3. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு: வி. க. கூறுவன யாவை ?

4. கவிதை என்பது யாது என்ற வினாவிற்கு வோர்ட்ஸ் வொர்த், கோலரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை ?

5. நம் முன்னோர்கள் நனிநாகரிகராய் விளங்கிய பான்மையை விளக்குக.

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக : $3 \times 4 = 12$

6. மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு என்பதனைப் பாவாணர் கூறுமாறு யாங்ஙனம் ?

7. நீதி நூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக.

8. 'இரந்தும் உயிர்வாழ்தல்' என்று தொடங்கும் குறட்பாவில் பொதிந்துள்ள இலக்கிய நயங்களை டாக்டர். அ. சிதம்பரநாதன் எவ்வாறு விளக்குகிறார் ?

9. முன்னேற்றம் என்பது பற்றி மு. வ. உரைப்பன யாவை ?

10. தமிழகக் குடைவரைக் கோவில்களைப் பற்றி எழுதுக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக : $1 \times 6 = 6$

11. நாடு, சமயம், சாதி இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வினின்று மாறுபடுதல் தவறாம் என்று திரு. வி. க. வாதிடுவதனை விளக்குக.

12. மனித வாழ்வே பெரியது என்னும் அடிப்படையில் மு. வ. உரைக்கும் எதிர்காலக் கனவு யாது ?

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக : 2 × 10 = 20

13. *'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து'* அல்லது *'சட்டை'* என்னும் சிறுகதையைக் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

*அல்லது*

*'வேலி'* அல்லது *'பால்வண்ணம் பிள்ளை'* என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. *'ஒவ்வொரு கல்லாய்'* அல்லது *'மண்'* என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

*அல்லது*

*'பழிக்குப் பழி'* கதையில் வரும் *'கிட்டு'* அண்ணன் தன்மீது வைத்துள்ள அன்பையும், செய்துள்ள உதவிகளையும் எண்ணிப்பார்த்து நன்கு படித்து உயர்ந்த நிலைக்கு குடும்பத்தைக் கொண்டு சென்றதாக ஒரு கற்பனைக் கதை வரைக.

*அல்லது*

*'நேர்மை தவறாத மாணிக்கம்'* தந்தையின் பிழையான பண்பை திருத்தினான். ஊருக்கே வழிகாட்டியாய் வாழ்ந்தான். அரசாங்கத்தின் விருதினைப் பெற்றான் என்னும் கருத்தோட்டத்துடன் ஒரு கற்பனைக் கதை வரைக.

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1 × 10 = 10

'சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு
தன்னில் செழித்திடும் வையம்
ஆதர வுற்றிங்கு வாழ்வோம் - தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

யாரும் பணிந்திடும் தெய்வம் - பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக் குள்ளே தெய்வமொன்று - இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

அறிவை வளர்த்திட வேண்டும் - மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்
சிறியரை மேம்படச் செய்தால் - பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்.

– பாரதியார்.

*குறிப்பு :* **காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.**

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. 3 × 2 = 6

16. Familarity breeds contempt.
17. Man proposes God disposes.
18. Keep off the grass.
19. Rain harvest is a must to improve ground water level.
20. Villages are the back-bone of our country said Gandhiji.
21. Physics is closely linked with other Sciences.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றனை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. $1 \times 4 = 4$

அ) ''சிறுதுளி பெருவெள்ளம்''

ஆ) ''குறைகுடம் கூத்தாடும்''

இ) ''தன்கையே தனக்குதவி''

*அல்லது*

'*தென்றல்*' அல்லது '*அலைகடல்*' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்கு குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

**குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா**

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்கு பதிலாக ( காது கேளாத மாணவர்கள் ) பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் உகந்த விடையை எழுதுக. $5 \times 2 = 10$

வீரர் உடுக்கும் உடை வட்டுடை என்று பெயர் பெற்றிருந்தது. வில்லாளருள் முதல்வனாக வைத்து எண்ணப்பட்ட சீவகன், மாற்றார் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டுவரப் புறப்பட்டபோது வட்டுடை உடுத்தியிருந்தான் என்று சிந்தாமணி கூறுகின்றது. தாய்முகங் காணாது கதறியழுத கன்றுகளும், அவற்றின் துயர் கண்டு தரியாத ஆயர்களும் இன்புறும் வண்ணம் பசுக்களை மீட்டுத் தந்த சீவகனை, வட்டுடைப் பொலிந்த தானை வள்ளல் என்று அக்காவியம் வியந்து புகழ்கின்றது. முழந்தாள் அளவாக வீரர் உடுக்கும் உடையே வட்டுடையாகும். விற்படையில் கைதேர்ந்த வீரர் 'தேர்ந்த வில்லிகள்' என்று பெயர் பெற்றனர்.

[ Turn over

தமிழ்நாட்டு முடி மன்னர்க்கு மூன்று முரசும் உண்டு. செம்மையின் சின்னம் நீதி முரசு; வன்மையின் சின்னம் கொடை முரசு; ஆண்மையின் சின்னம் படைமுரசு, வெம்மை வாய்ந்த புலியை வீறுடன் தாக்கிக் கொம்பினால் கீறிக்கொன்ற பெருங்காளையின் தோலாற் செய்யப்படுவது வீரமுரசம். போர் ஒடுங்கிய காலங்களில் அஃது அரண்மனையில் ஒரு மணி மஞ்சத்தில் வீற்றிருக்கும். மன்னன் படையெடுக்கும் பொழுது அம்முரசு மாளிகையினின்று எழுந்து முன்னே செல்லும்.

போர்க்களத்தில் வீர வெறியூட்டும் இசைக்கருவிகள் பல இருந்தன. பறையும் பம்பையும், திட்டையும், தடாரியும், முழவும் முருடும், கரடிகையும் திண்டியும் அத்தகைய கருவிகள். அவற்றின் பெயர்கள் ஒலிக்குறிப்பால் அமைந்தனவாகத் தோன்றுகின்றன. பம்பம் என்று ஒலிப்பது முருடு; கரடிபோல் கத்துவது கரடிகை இவ்விசைக் கருவிகள் ஒன்று சேர்ந்து ஒலிக்கும் பொழுது வீரரது தலை கிறங்கி ஆடும்; நரம்புகளில் முறுக்கேறும்; போர் வெறி பிறக்கும்; வீரம் சிறக்கும்.

*வினாக்கள் :*

16. சிந்தாமணி சீவகனை எவ்வாறு புகழ்கிறது ?

17. 'தேர்ந்த வில்லிகள்' - யார் ?

18. 'வீரமுரசு' விளக்கம் தருக.

19. ஒலிக்குறிப்பால் பெயர் பெற்ற போரிசைக் கருவிகள் யாவை ?

20. வீரரது தலை எப்பொழுது கிறங்கி ஆடும் ?

21. முரசு எங்கே வீற்றிருக்கும் ? எப்பொழுது வீற்றிருக்கும் ?

22. சீவகன் எதைக் கொணரப் புறப்பட்டான் ?

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக : $10 \times 1 = 10$

23. ஒன்றோ அல்லது இரண்டோ தருக

( தொடரில் உள்ள வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. வாழை பழத்தை தின்ற பின் தோலை சாலையில் போடாது குப்பை கூடையில் போடு

( தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. 'அலை'-'அளை' அல்லது 'அரண்'-'அரன்'

( பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக )

26. டயாபெட்டிக் பேஷண்ட், ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்

( ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக )

27. ஸ்ரீரங்கத்தில் ஸ்வாமி ஸ்ரீரங்கநாதர் கோவில் கொண்டுள்ளார்

( வடசொற்கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக )

28. தமிழ்நாட்டின் இப்பொழுது எஞ்சியுள்ல ஒவியங்களில் மிகவும் தொண்மையானவை பல்லவர் காலத்தவையே ஆகும்

( எழுத்துப்பிழைகளைத் திருத்தி எழுதுக )

29. வாழ்கத் தமிழ் என்று அவனாச் சொன்னான். அறிந்துச் சொல் எனக்கு.

( தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

30. சோறு தின்று பழம் உண்டு பால் சாப்பிட்டுப் படுத்தான்.

( மரபுவழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக )

31. அப்பிசி மாசம் அடமள இம்பாங்க

( கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக )

32. ஒழுக்கமுடைமை குடிமை என்பது திருவள்ளுவர் வகுத்த வரையறையாகும்

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).